ஸ்ரீ:



## வடகலை ஸ்ரீவைஷ்ணவ

# பெருமாள் திரு ஆராதனம்

(தென்கலைக்கு தனியாக வெளியிடப்படும்.)



## ஸ்ரீவைஷ்ணவ கேந்த்ரம்
## தீவலூர் ஸ்ரீநிவாஸன்

தெளிவான படங்களுடன் லகுவாக லௌகீகர்கள் சுலபமாக
திருவாராதன் செய்யும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன.
திருவாராதனம், புண்யாகவாசனம், உபாகர்மா மற்றும் அனைத்து பூர்வ மந்திரங்கள்
அமாவாசை தர்ப்பணம், ச்ராத்தம் (யஜீர் மற்றும் ஸாமம்) மற்றும் க்ருஷ்ண யஜுர்
வேதம் முழுமையும் சி.டி.யில் மிகக் குறைந்த செலவில் பதிவு செய்து தரப்படும்.

தேவைக்கு போன்: 044- 2485 1392

ஸ்ரீ:



# வடகலை திருவாராதனக்ரமம்

மாத்யாஹ்நிகம் செய்த பிறகு பெருமாள் திருவாராதனம் செய்யவேணும். கைகால்களை நன்றாக அலம்பிக்கொண்டு இரண்டு முறை ஆசமனம் செய்து, பெருமாள் ஸந்நிதிக்கு அருகில் சென்று, சண்டர், ப்ரசண்டர் முதலான த்வாரபாலகர்களை நினைத்து அவர்களை ஸேவித்து அவர்களின் அநுஜ்ஞை பெற்றுக் கொண்டு வலது காலை முன்னே வைத்து ஸந்நிதிக்குள் ப்ரவேசிக்க வேண்டும்.

தாம் வசிக்கும் இடத்திற்குத் தகுந்தபடி தனி மேடையிலோ அலமாரியிலோ, மாடத்திலோ கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பெட்டியுடன் பெருமாளை எழுந்தருளப் பண்ணி, திருவாராதனம் செய்யலாம். ஐந்து வட்டில்கள் வைக்கச் சக்தியில்லாதவர்கள் மூன்று வட்டில்கள், அதையும் வைக்கச் சக்தியற்றவர்கள் பாத்யத்திற்கு ஒன்றும், மற்றவைகளுக்காக ஒன்றும் ஆக இரண்டு வட்டில்களுடன் திருவாராதனம் செய்யலாம்.

பெருமாளை எழுந்தருளப் பண்ணியிருக்கும் இடத்துக்கு ( அதாவது : கோயிலாழ்வார் அல்லது மாடம் அல்லது அலமாரி ) அருகில் சென்று கைகூப்பிக்கொண்டு பின்வரும் ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்.

*கூர்மா தீந் திவ்யலோகம் ததநு மணிமயம் மண்டபம் தத்ரஸேஷம்,*
*தஸ்மிந் தர்மாதி பீடம் ததுபரி கமலம் சாமர க்ராஹிணீஸ்ச*
*விஷ்ணும் தேவீ விபூஷாயுத கணமுரகம் பாதுகே வைநதேயம்,*
*ஸேநேஸம் த்வார பாலாந் குமுதமுககணாந் விஷ்ணுபக்தாந் ப்ரபத்யே*

பிறகு (தண்டம்போல் கீழே விழுந்து) நான்கு தடவைகள் ஸேவித்தெழுந்து கைகூப்பி நின்றுகொண்டு,

"ஓம் சண்டாதி த்வாராபாலேப்யே நம:"

"ஓம் ப்ரசண்டாதி த்வாராபாலேப்யோ நம:"

என்று சொல்லி, துவாரபாலர்களை ஸேவித்து, பெருமாள் எழுந்தருளியிருக்கும் இடத்துக்கு வலது காலை முதலில் வைத்துச் சென்று , திருமணி ஸேவித்து முதலில் வலது கையால் இடது கையிலும், பிறகு இடது கையால் வலது கையிலும், அதன்பின் வலது கையால் இடது கையிலும் மூன்று தடவை கைகளைத் தட்டி

"யம் வாயவே நம:" என்று சொல்லிப் பெருமாள் பெட்டியைத் திறக்க வேண்டும். பிறகு கைகூப்பி நின்று,

*"கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே*
*உத்திஷ்ட நரஸார் தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்*
*வீர ஸௌம்ய விபுத்யஸ்வ கௌஸல்யாநந்த வர்த்தந*
*ஜகத்தி ஸர்வம் ஸவபிதி த்வயி ஸுப்தே நராதிப*
*யாமிந்யைதி யதுநாத விமுஞ்ச நித்ராம்*
*உந்மேஷம்ருச்சதி தவோந்மிஷிதேந விஸ்வம்*
*ஜாதஸ் ஸ்வயம் கலு ஜகத்திதமேவ கர்தும்*
*தர்ம ப்ரவர்த்தந தியா தரணீதலேஸ்மிந்*
*ஸுகாய ஸம்ப்ராப்தமிதம் தவாஸ்து*
*ஜகத்பதே ஜாக்ருஹி நந்தஸூநோ*
*அம்போஜமந்த்ஸ்ஸய மஞ்ஜுதார*
*லோலம்ப முந்மீலது லோசநம் தே"*

என்று அநுஸந்தித்து தர்ப்பம் அல்லது பலகையாலாகிய ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு, அல்லது நின்றுகொண்டு

"ஆஸநமந்தரஸ்ய ப்ருதிவ்யா மேருப்ருஷ்ட ருஷி: ஸுதலம் சந்த: ஸ்ரீகூர்மோ தேவதா ஆஸநே விநியோக: ப்ருத்வித்வயா த்ருதா லோகா தேவித்வம் விஷ்ணுநா த்ருதா த்வம் ச தாரயமாம் தேவி பவித்ரம் குருசாஸநம்:" என்கிறவரையில் சொல்லி ந்யாஸம் செய்து,

"அஸ்மத்தேஸிக மஸ்மதீய பரமாசார்யாநசேஷாந் குரூந் ஸ்ரீமல்லக்ஷ்மணயோகி புங்கவ மஹா பூர்ணௌ முநிம் யாமுநம் ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம் ஸேநேஸம் ஸ்ரியமிந்திரா ஸஹஸ்ரம் நாராயணம் ஸம்ஸ்ரயே" என்று சொல்லி,

அல்லது "அஸ்மத் குருபரம்பராயை நம:" என்றாவது சொல்லி, ஆசார்யர்களை த்யானித்து ஆராதனத்திற்குத்தக்க மனோநிலைக்காக பகவானிடம் சராணாகதி செய்யவும். அல்லது ஸ்ரீமந் நிகமாந்த மாஹாதேசிகன் அருளிச் செய்துள்ள ந்யாஸதசகத்தை அநுஸந்திக்கவும்.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிய ந்யாஸ தசகம்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி
அஹம் மத்ரக்ஷணபரோ மத்ரக்ஷண பலம் ததா
நமம ஸ்ரீபதேரேவேத்யாத்மாநம் நிக்ஷிபேத் புத:

ந்யஸ்யாம்யகிஞ்சந: ஸ்ரீமந் அநுகூலோஅந்ய வர்ஜித:
விஸ்வாஸ ப்ரார்தநா பூர்வம் ஆத்ம ரக்ஷாபரம் த்வயி
ஸ்வாமி ஸ்வஸேஷம் ஸ்வவஸம் ஸ்வபரத்வேந நிர்பரம்
ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்

ஸ்ரீமந் அபீஷ்டவரத த்வாமஸ்மி ஸரணம் கத:
ஏதத் தேஹாவஸாநே மாம் த்வத் பாதம் ப்ராபய ஸ்வயம்
த்வச் சேஷத்வே ஸ்திரதியம் த்வத் ப்ராப்த்யேக ப்ரயோஜநம்
நிஷித்த காம்ய ரஹிதம் குரு மாம் நித்ய கிங்கரம்

தேவீ பூஷண ஹேத்யாதி ஜுஷ்டஸ்ய பகவம்ஸ் தவ
நித்யம் நிரபராதேஷு கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வமாம்
மாம் மதீயம் ச நிகிலம் சேதநா சேதநாத்மகம்
ஸ்வகைங்கர்யோபகரணம் வரத ஸ்வீகுரு ஸ்வயம்

த்வதேக ரக்ஷ்யஸ்ய மம த்வமேவ கருணாகர
ந ப்ரவர்த்தய பாபாநி ப்ரவ்ருத்தாநி நிவர்த்தய
அக்ருத்யாநாம் ச கரணம் க்ருத்யாநாம் வர்ஜநம் ச மே
க்ஷமஸ்வ நிகிலம் தேவ ப்ரணதார்த்தி ஹர ப்ரபோ

ஸ்ரீமந் நியத பஞ்சாங்கம் மத்ரக்ஷண பரார்பணம்
அசீகர: ஸ்வயம் ஸ்வஸ்மிந் அதோஹமிஹ நிர்பர: "

இதற்கு பதிலாக ஸ்வாமி தேசிகரின் பின்வரும் அமிருதாசுவாதினி பாசுரத்தையாவது அநுஸந்திக்கவும்.

*"நின்னருளாங் கதியன்றி மற்றொன் றில்லேன்*
*நெடுங்காலம் பிழைசெய்த நிலைக ழிந்தேன்*
*உன்னருளுக் கினிதான நிலையு கந்தேன்*
*உன் சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன்*
*மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து*
*வானவர்தம் வாழ்ச்சித்தர வரித்தே னுன்னை*
*இன்னருளா லினியெனக்கோர் பரமேற் றாமல்*
*என்றிருமா லடைக்கலங்கொள் ளென்னை நீயே."*

பிறகு 28 தடவைகள் மூலமந்த்ரத்தை மனதில் த்யானித்து மூன்று ப்ராணாயாமம் செய்து,

"க்ருதஞ்ச கரிஷ்யாமி, பகவந்நித்யேந, பகவத்ப்ரீத்யர்தேந, மஹாவிபூதிசாதுராத்ம்ய பகவத் வாஸுதேவபாதாரவிந்தார்ச்சநேந, இஜ்யாராதநேந, பகவத்கர்மணா, பகவந்தம் வாஸுதேவம், அர்ச்சயிஷ்யாமி" என்று ஸங்கல்பித்துக் கொண்டு,

"பகவாநேவ இஜ்யாராதனாக்யம் கர்மஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே பகவாந் ஸ்வயமேவ காரயதி" என்று ஸாத்விக த்யாகம் செய்யவும்.

பிறகு இந்த அசுத்த சரீரம் எரிக்கப்பட்டுப் பஞ்ச பூதங்களும் எரிந்து போய்விட்டதாகவும், புதிய சுத்தமான சரீரம் பகவானால் அளிக்கப்பட்டதாயும்,

அதில் ஜீவாத்மாவான தான் இருப்பதாகவும் இந்த சரீரம் பகவானின் இடது திருவடியின் கட்டைவிரலிலிருந்து பெருகிய அமிர்தப் பெருக்கினால் அபிஷேகம் செய்யப்பட்டதாகவும், சங்க சக்ரங்களால் அடையாளம் செய்யப்பட்டு திருமண் காப்புத் தரித்திருப்பதாகவும் த்யானம் செய்ய வேணும்.

"அஸ்ய ஸ்ரீமத் அஷ்டாக்ஷரமாஹா மந்த்ரஸ்ய, பதரிகாஸ்ரமவாஸீ ஸ்ரீமந் நாராயண ரிஷி:, - தேவீ காயத்ரீ சந்த: , - பரமாத்மா ஸ்ரீமந் நாராயணோ தேவதா, ஆராதநார்த்தே விநியோக:" என்று ந்யாஸங்கள் செய்யவும். பிறகு,

ஹ்ருதயகமலத்தில் திவ்ய மங்கள விக்ரஹத்துடன் எழுந்தருளியிருக்கும் பெருமாளை த்யானம் செய்து அர்க்கயம், பாத்யம், ஆசமனீயம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் முதலான உபசாரங்களை மனஸ்ஸினால் ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு கைகூப்பிக்கொண்டு,

"பகவந் புண்டரீகாக்ஷ, ஹ்ருத்யாகந்து மயா க்ருதம்
ஆத்மஸாத் குரு தேவேஶ, பாஹ்யைஸ்த்வாம் ஸம்யகர்ச்சயே
விபோ ஸகல லோகேஶ ப்ரணதார்த்தி ஹராச்யுத
த்வாம் பக்த்யா பூஜயாம்யத்ய, போகைரர்க்யாதிபி: க்ரமாத்"

என்று பெருமாளிடத்தில் விஜ்ஞாபிக்க வேண்டும்.



(படத்தில் கண்டுள்ளபடி) திருவாராதனத்திற்காக அர்க்யாதி பாத்திரங்களைப் தமக்கு வலது பக்கம் ஆரம்பித்து, (1) அர்க்யம், (2) பாத்யம், (3) ஆசமநீயம், (4) ஸ்நாநீயம், (5) ஸர்வார்த்ததோயம், (6) ப்ரதிக்ரஹ பாத்ரம். இவைகளைத் தவிர, திருக்காவேரி, திருமணி, புஷ்பம், துளஸி இவைகளுடன் திருமஞ்சனத் தட்டு இருக்க வேண்டும். திருக்காவேரியில் பூர்ணமாக தீர்த்தம் வைத்துக்கொள்ளவேணும். அதில் ஏலக்காய், கிராம்பு பொடி செய்து குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலியது சேர்க்கவும். வலது பக்கத்திலுள்ள திருக்துழாய் முதலியதை "மோஷணதாஹந ப்லாவனம்" செய்து ஓர் புஷ்பம் அல்லது துளஸியை தீர்தத்தில் சேர்த்து, 7 தடவை அஷ்டாக்ஷரத்தினால் அந்த ஜலத்தை ஜபித்து அதிலிருந்து உத்தரிணியினால் தீர்த்தம் எடுத்து அர்க்யம் பாத்ரம் முதலியதை அஷ்டாக்ஷரம் சொல்லி அலம்பி, அல்லது ப்ரோக்ஷித்து

பிறகு வட்டில்களை தீர்த்த்தினால் நிரப்பவும்.



வட்டில்களில் தீர்த்தம் சேர்த்தல்

பிறகு எல்லாவட்டில்களிலும் திருத்துழாய்தளம் ( அல்லது புஷ்பம் ) சேர்க்கவும். பிறகு அர்க்யாதி வட்டில்களின் மேல் வலது கையால் தொட்டு

| | |
|---|---|
| அர்க்யத்தில் | "ஓம் நமோ நாராயணய அர்க்யம் பரிகல்பயாமி" |
| பாத்யத்தில் | "ஓம் நமோ நாராயணய பாத்யம் பரிகல்பயாமி" |
| ஆசமனீயத்தில் | "ஓம் நமோ நாராயணய ஆசமனீயம் பரிகல்பயாமி" |
| ஸ்நாநீயத்தில் | "ஓம் நமோ நாராயணய ஸ்நாநீயம் பரிகல்பயாமி" |
| ஸர்வார்த்ததோயம் | "ஓம் நமோ நாராயணய ஸர்வார்த்ததோயம் பரிகல்பயாமி" |

என்று பாத்திர பரிகல்பனம் செய்து, பிறகு அர்க்யபாத்திரத்திலிருந்து உத்தரிணியினால் ஜலம் எடுத்துக்கொண்டு திருவாராதனத்திற்கான வஸ்துக்களையும் அந்த இடத்தையும் தன்னையும் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேணும். பிறகு தன் ஆசார்யர்களை தியானம் செய்து ஸேவித்து பகவானை ஆராதிப்பதற்கு வேண்டிய புத்தி சக்திகளை அனுக்ரஹிக்கும் படி அந்த ஆசார்யாளை ப்ராக்திக்கவேணும். பிறகு,

"ப்ரஹ்மாத்யா: ஸகலா தேவா: யம் ந ஸ்மர்த்து மநீஸ்வரா:
ஸ ஏஷ பகவாநத்ய மம ப்ரத்யக்ஷதாம் கத:" என்று சொல்லி

"ஸ்வாகதம் பகவந்நத்ய மாம் தாரயிது மாகத:
தந்யோஸ்மி அநுக்ருஹீதோஸ்மி க்ருதார்தோஸ்மி க்ருபாநிதே"
என்று ஸ்வாகதம் பண்ணி பிறகு,
"ஸாந்நித்யம் குரு தேவேஶ ஸர்வதா ஸர்வகாமத
த்ரவ்ய மந்த்ர க்ரியா பக்தி: ம்ரத்தாஹாநிம் ஸஹப்ரபோ"

என்று சொல்லி பகவானுடைய ஸாந்நித்யத்தை வேண்டி, தன் யோக்யதைக் குறைவை பொருத்தருள ப்ரார்த்தித்து ஆராதனம் ஆரம்பித்தல்:

1. மந்த்ராஸநம் (பெருமாளை ஆராதனத்தில் அமர்த்துதல்)
2. ஸ்நாநாஸநம் (பெருமாளுக்கு ஸ்நாநம் பண்ணி வைத்தல்)
3. அலங்காராஸநம் (வஸ்தர, சந்தன, புஷ்ப, தூப, தீப, அர்ச்சனை)
4. போஜ்யாஸநம் (தளிகை அமுது செய்து வைத்தல்)
5. புநர்மந்த்ராஸநம் (சாற்றுமுறைக்கு ஏளப்பண்ணுதல்)
6. பர்யங்காஸநம் (நித்திரைக்கு ஏளப்பண்ணுதல்)

என்று ஆஸநங்கள் ஆறு.

# 1. மந்த்ராஸநம்

பகவானைத் திருவாராதனம் கண்டருள தேவிகள் முதலியவர்களோடு இங்கே ஸந்நிதானம் செய்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கவும்.

பிறகு இடது கையால் திருமணியை ஸேவித்துக்கொண்டே வலது கையால் அர்க்யபாத்திரத்திலிருந்து உத்தரதிரிணியால் தீர்த்தம் எடுத்து,
"ஓம் நமோநாராயணாய அர்க்யம் ஸமர்ப்பயாமி"



அர்க்ய பாத்யங்கள் ஸமர்ப்பித்தல்

என்று சொல்லி பெருமாள் வலது கையில் சிறிது தீர்த்தம் ஸமர்ப்பித்ததாக எண்ணி அந்த தீர்த்தத்தை ப்ரதிக்ரஹபாத்திரத்தில் சேர்க்கவும்.

பிறகு பாத்ய வட்டிலிலிருந்து உத்தரிணியால் தீர்த்தம் எடுத்து,

"ஓம் நமோநாராயணாய பாத்யம் ஸமர்பயாமி"

என்று சொல்லி இருமுறை தீர்த்தம் எடுத்து பகவானுடைய வலது இடது திருவடிகளில் சிறிது தீர்த்தம் ஸமர்ப்பித்ததாக எண்ணி அந்த தீர்த்தத்தை ப்ரதிக்ரஹபாத்திரத்தில் சேர்க்கவும்.

பிறகு ஆசமநீய வட்டிலிலிருந்து உத்தரிணியால் 3முறை தீர்த்தம் எடுத்து,

"ஓம் நமோநாராயணாய ஆசமநீயம் ஸமர்ப்பயாமி" என்று பெருமாளுக்கு ஆசமனம் பண்ணி வைத்து அந்த தீர்த்தத்தை ப்ரதிக்ரஹபாத்திரத்தில் சேர்க்கவும்.

பிறகு கைகளை கூப்பிக்கொண்டு தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் பகவான் எப்போதும் அவருக்கு கைங்கரியம் செய்பவனாக ஸ்வீகரிக்க வேணுமென்று ப்ரார்திக்க வேண்டும்.

# 2. ஸ்நாநாஸநம்

பிறகு ஒரு திருத்துழாய் தளத்தை பெருமாள் அருகில் சேர்த்து "ஓம் நமோ நாராயணாய ஸ்நாநாஸனம் ஸமர்ப்பயாமி" என்று பகவானை ஸ்நாநாஸநத்திற்கு எழுந்தருளும்படி பிரார்த்தித்து, அர்க்யம் பாத்யம் ஆசமநீம் இவை ஸமர்ப்பித்து படத்தில் உள்ளதுபோல் பேலாவின் மீது திருமஞ்சனத் தட்டை வைத்து, பெருமாளை அதன்மீது எழுந்தருளப்பண்ணி, திருமணி ஸேவித்தபடி, பச்சை (பசும்) பால் இருந்தால் அதை பெருமாள் மீது மெள்ள வார்த்து அப்பாலை மீண்டும் பாலிருந்த பாத்திரத்திலேயே எடுத்து வைத்துவிட்டு பின் ஸ்நாநீய பாத்திரத்தில் உள்ள தீர்த்தத்தை உத்தரிணியால் எடுத்து புருஷஸூக்தம்/ நீராட்டம்/அஷ்டாக்ஷரம் தெரிந்ததைச் சொல்லி, திருமஞ்சனம் பண்ண வேண்டும்.




*"வெண்ணெ யளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு*
*திண்ணென விவ்விரா வுன்னைத் தேய்த்துக்கிடக்கநா னொட்டேன்*
*எண்ணெய் புளிப்பழங் கொண்டிங் கெத்தனை போதுமிருந்தேன்*
*நண்ணலரிய பிரானே நாரணா நீராட வாராய்"*

என்கிற பாசுரத்தைச் சொல்லவும்.



பாலினால் திருமஞ்சனம்

பிறகு தூபக்காலில் தணல் சேர்த்துச் சாம்பிராணித்தூள் அதில் போட்டு, அந்தப் புகையில் பெருமாள் துடைக்கும் வஸ்த்தரத்தைக் காட்டி, ஸாளக்ராமத்தை அந்த வஸ்த்திரத்தால் துடைக்க வேண்டும். பிறகு பெட்டியில் முன் உள்ள தூசிகளை அகற்றிவிட்டு, மெத்தைமேல் (அல்லது பட்டுத் துணியை மெத்தையாக்கி) பெட்டியினுள் பெருமாளை எழுந்தருளப் பண்ண வேண்டும்.



பெருமாள் பெட்டியை துடைத்து சுத்தம் செய்தல்

பெருமாளை ஒரு
வெள்ளை வஸ்திரத்தினால் துடைத்தல்



# 3. அலங்காராஸநம்

பிறகு ஒரு திருத்துழாய் தளம் சேர்த்து "ஓம் நமோ நாராயணாய அலங்காராஸநம் ஸமர்ப்பயாமி" என்று பெருமாளை அலங்காராஸனத்துக்கு எழுந்தருளும்படி பிரார்த்திக்க வேண்டும்.

பிறகு, வட்டில்களில் உள்ள பழைய தீர்த்தங்களை ப்ரதிக்ரஹ பாத்திரத்தில் சேர்த்துவிட்டு, மறுபடி வாசனை சேர்த்து, புதிய ஜலத்தைத் திருக்காவேரியிலிருந்து அர்க்ய, பாத்ய, ஆசமநீய, ஸர்வார்த்ததோய வட்டில்களில் நிரப்பி முன்போல் பரிகல்பனம் பண்ணவேண்டும். பிறகு பெருமாள் பழைய வஸ்த்ரத்தைக் களைந்து புதியதாக, வஸ்த்ரம் சாத்தினதாகப் பாவிக்க வேண்டும். மணிஸேவித்தபடி, உத்தரிணியால் அந்தந்த வட்டிலிலிருந்து தீர்த்தம் எடுத்து அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் ஸமர்ப்பிக்க வேண்டும்.







பிறகு திருமணி ஸேவித்துக்கொண்டு பெருமாளுக்கு சந்தனம், புஷ்பம், தூபம், தீபம் முதலியவற்றை, அஷ்டாக்ஷரம் சொல்லிக்கொண்டே ஸமர்ப்பிக்கவும். முடியுமானால்




"பூசும் சாந்தென் னெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய சாசகம்செய்

மாலையே வான்பட்டாடையுமஃதே தேசமான வணிகலனு மென்கை கூப்புச் செய்யையே ஈசன் ஞால முண்டுமிழ்ந்த எந்தை யேக மூர்த்திக்கே.” என்கிற பாசுரத் தையும் சொல்லலாம்.

## மந்த்ரபுஷ்பம் (வேதவிண்ணப்பம்)

“ஹரி: ஓம். அக்நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய
தேவம் ருத்விஜம் ஹோதாரம் ரத்நதாதமம் ஹரி: ஓம்”

“ஹரி: ஓம். இஷேத்வோர்ஜேத்வா வாயவஸ்தோபாயவஸ்த
தேவோ வஸ் ஸவிதா ப்ரார்பயது ஸ்ரேஷ்டதமாய கர்மணே ஹரி: ஓம்.”

“ஹரி: ஓம். அக்ந ஆயாஹி வீதயே க்ருணாநோ ஹவ்யதாதயே
நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி ஹரி: ஓம்.”

“ஹரி: ஓம். ஸம்நோ தேவீரபிஷ்டய ஆபோ பவந்து பீதயே
ஸம்யோரபிஸ்ரவந்து ந: ஹரி: ஓம்.”

“ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பஸ்சாத் நாராயணாயே த்யுபரிஷ்டாத் ஓமித் யோகாக்ஷரம் நம இதி த்வே அக்ஷரே நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம் யோஹவை நாராயண ஸ்யாஷ்டாக்ஷரம் பதமத்யேதி அநபப்ரவஸ் ஸர்வமாயுரேதி விந்ததே ப்ராஜா பத்யம் ராயஸ்போஷம் கௌபத்யம் ததோம் ருதத்வமஸ்நுதே ததோம்ருதத்வமஸ்நுத இதி ய ஏவம் வேத இத்யுபநிஷத் அதகர்மாண் யாசாராத்யாநி க்ருஹ்யந்தே உதகயந பூர்வ பக்ஷாஹ: புண்யாஹேஷு கார்யாணி யஜ்ஞோபவீதிநா ப்ரதக்ஷிணம் ”

“இச்சாமோ ஹி மஹா பாஹும் ரகுவீரம் மஹாபலம்
கஜேந மஹதா யாந்தம் ராமம் சத்ராவ்ருதாநநம்
தம் த்ருஷ்ட்வாஸத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே
தாஸாமாவிரபூத் ஸௌரி: ஸ்மயமாந முகாம்புஜ:
பீதாம் பரதரஸ் ஸ்ரக்வீ ஸாக்ஷந் மந்மத மந்மத:
வைகுண்டேது பரே லோகே ஸ்ரியா ஸார்தம் ஜகத்பதி:
ஆஸ்தேவிஷ்ணுரசிந்த்யாத்மாபக்தைர்பாகவதைஸ்ஸஹ”

“சென்றால் குடையா மிருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்,
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம், திருமாற் கரவு.”

“கதா பநஸ் ஸங்க ரதாங்க கல்பக
த்வஜாரவிந்தாங்குஸ வஜ்ரல ாஞ்சநம்
த்ரிவிக்ரம த்வச் சரணாம்புஜத்வயம்

மதீய மூர்தாநமலங்கரிஷ்யதி"

பிறகு பின்வரும் பகவந் நாமாக்களைச் சொல்லி பெருமாள் திருவடியில் புஷ்பம் அல்லது துளஸீதளத்தை அர்ச்சனையாக ஸமர்ப்பிக்க வேண்டும்.

ஓம் வாஸுதேவாய நம:
ஓம் ஸங்கர்ஷணாய நம:
ஓம் ப்ரத்யும்நாய நம:
ஓம் அநிருத்தாய நம:
ஓம் கேஸவாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் மதுஸூதநாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஹ்ருஷீகேஸாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் மத்ஸ்யாய நம:
ஓம் கூர்மாய நம:
ஓம் வராஹாய நம:
ஓம் நாரஸிம்ஹாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் பார்கவராமாய நம:
ஓம் ஸ்ரீராமாய நம:
ஓம் பலராமாய நம:
ஓம் ஸ்ரீக்ரஷ்ணாய நம:
ஓம் கல்கிநே நம:
ஓம் ச்ரியை நம:
ஓம்அம்ருதோத் பவாயை
ஓம் கமலாயை நம:
ஓம் சந்த்ரஸோதர்யை நம:
ஓம் விஷ்ணுபத்ந்யை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் ஸார்ங்கிண்யை நம:
ஓம் தேவதேவ்யை நம:
ஓம் மஹாலஷ்ம்யை நம:
ஓம் ஸுரஸுந்தர்யை நம:

ஓம் ஸர்வாபீஷ்ட பலப்ரதாயை நமோ நம: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி"

என்று சொல்லி, அர்ச்சனை செய்து, பிறகு தெரிந்த ஸ்தோத்திரங்கள், ப்ரபந்தங்கள்அல்லது அஷ்டாக்ஷரம் ஜபம் செய்து முடிவாக ஒரு தரம் அர்க்யம் ஸமர்ப்பிக்கவும்.

# 4. போஜ்யாஸநம்

"ப்ராப்யந்து ப்ராபணேகாலே பதத்யாநீத ஏஷ தே
ம்ருஷ்டமேத்ய ஸ்திராந்நாநி பக்ஷ்ய போஜ்யாந்யநேகஸ:
ஸம்பந்நாநி ஜகந்நாத போஜ்யாஸந முபாஸ்ரயே"

"ஓம் நமோ நாராயணாய போஜ்யாஸனம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லி ஒரு திருத்துழாய் தளத்தைச் சேர்த்து அர்க்ய, பாத்யம் ஆசமநீயம் இவைகள் ஸமர்ப்பித்து, அன்னம் முதலியவைகளை அர்க்ய தீர்த்தத்தினால் ப்ரோக்ஷித்து திருத்துழாய் சேர்த்து திருமணி ஸேவித்துக் கொண்டு,

*"நாறு நறும் பொழில்மாலிருஞ்சோலை நம்பிக்கு, நான்*
*நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்,*

*நூறு தடாநிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்,*
*ஏறு திருவுடையான்இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ”*



தளிகை அமிசை செய்துவைத்தல்

என்கிற பாசுரத்தையும் சொல்லி, “ஆராவமுதே அமுது செய்தருள வேணும்” என்றும் விஜ்ஞாபித்து க்ராஸ முத்ரை காட்டியபடி, மணிஸேவித்துக்கொண்டே ப்ராணாஹுதிகள் செய்வித்து, ஹஸ்தோதகம் சேர்த்து, ஒவ்வொன்றாக எடுத்து பெருமாள் அமுது செய்வதாக மனக்கண்ணால் த்யானித்து வேண்டியமட்டும் அவன் அமுது செய்ய நேரம் கொடுத்து “மதுவாதா” போன்ற மந்த்ரங்கள் சொல்லி அமுது செய்விக்கவும். நடுவில் பாநீயம் ஸமர்ப்பிக்கவும். பிராட்டிகளுக்கும் தளிகை ஸமர்ப்பிக்கவும்.

# 5. புநர் மந்த்ராஸநம்

ஒரு தளம் திருத்துழாய் சேர்த்து

“ஓம் நமோ நாராயணாய புநர் மந்த்ராஸனம் ஸமர்ப்பயாமி” என்று பகவானை மறுபடி மந்த்ராஸனத்தில் எழுந்தருள ப்ரார்தித்து பாத்யம் ஆசமநம் இவைகளை ஸமர்ப்பித்து பக்ஷணங்கள் தாம்பூலம் இவைகளை அர்க்ய தீர்த்தத்தினால் ப்ரோக்ஷித்து, திருவஷ்டாக்ஷரத்தினால் நிவேதனம் செய்து,

"லக்ஷ்மீசரண லக்ஷாங்க ஸாக்ஷி ஸ்ரீவத்ஸவக்ஷஸே
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேஸாய மங்களம்
ஸ்ரிய: காந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்
அஸ்து ஸ்ரீஸ்தந கஸ்தூரீ வாஸநா வாஸிதோரஸே
ஸ்ரீஹஸ்திகிரி நாதாய தேவராஜாய மங்களம்
மங்களாஸாஸநபரைர் மதாசார்ய புரோகமை:
ஸர்வைஸ்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்" என்று மங்கள ஸ்லோகங்களைச் சொல்லி




கற்பூர ஹாரத்தி பண்ணவேண்டியது. சரணம் பவித்ரம் இத்யாதிகளை அநுஸந்தித்து, திருப்பாவை சாத்துமறையையும் வாழித்திருநாமம் முதலியவற்றையும் அநுஸந்திக்க வேண்டும்.

# 6. பர்யங்காஸநம்

பகவானை பரார்த்தித்து பர்யங்காஸநத்தில் எழுந்தருளப்பண்ணி,
பந்நகாதீஸ பர்யங்கே ரமாஹஸ்தோபதாநகே

ஸுகம் ஸேஷ்வ கஜாத்ரீஸ ஸர்வா ஜாக்ரத ஜாக்ரத
உறகல் உறகல் உறகல் ஒண்சுட ராழியே சங்கே,
அறவெறி நாந்தக வாளே| அழகிய சார்ங்கமே| தண்டே,
இறவு படாமலிருந்த எண்மருலோக பாலீர்காள்,
பறவை யரையா உறகல் பள்ளியறை குறிக்கொண்மின்

என்று சொல்லி, பகவான் அமுது செய்ததிலிருந்து சிறிது ஆசார்யர்களுக்கு நிவேதனம் செய்யவும்.

பிறகு, ஸாஷ்டாங்கமாக ஸேவித்து, புத்தி பூர்வகமான அபசாரங்கள் எல்லாவற்றையும் க்ஷமித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க வேண்டும்.

"ஸோஹம் தே தேவ தேவேஸ
நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர
மநோவ்ருத்தி: ப்ரஸீதமே
உபசாராபதேஸேந க்ருதாந் அஹரஹர் மயா
அபசாராந் இமாந் ஸர்வாந் க்ஷமஸ்வ புருஷோத்தம"

என்று சொல்லி பிறகு, பெருமாள் சந்தனம் திருத்துழாய் புஷ்பம் இவைகளை கொஞ்சம் களைந்து எடுக்கவும், பிறகு பெருமாள் பெட்டியை மூடவேண்டும்.

கடைசியில் ஆசமனம் செய்ய வேண்டும். பின்பு பெருமாளின் அபிஷேக தீர்த்தத்தைச் சாப்பிடுதல் வேண்டும். திருத்துழாயை ஸ்வீகரிக்கவேணும்.

பகவதாராதனம் செய்யாமல் ஒருபொழுதும் சாப்பிடக் கூடாது. அவகாசம் இல்லாவிட்டால் அர்க்ய, பாத்ய, ஆசமநீயங்களை மாத்திரமாவது ஸமர்ப்பித்து, தளிகை அமுது செய்விக்கவும், பிறகு பெருமாள் தீர்த்தத்தை ஸ்வீகரிக்கவும் வேண்டும்.

## சாத்துமறை க்ரமம்

1. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரையடியே, போற்றும் பொருள்கேளாய்।
பெற்றம் மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து, நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது,
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா।
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும், உன்றன்னோடு
உற்றோமே யாவோமுனக்கேநா மாட்செய்வோம்,
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

2. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன,
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே,
இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்,
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்,
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணாஉன்
சேவடி செவ்வி திருக் காப்பு.
அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு,

வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதிவ லத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு,
படையோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

ஸர்வதேச தசாகாலே

ஸர்வ தேச தசாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்ததாமபிவர்ததாம்
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ
ஸ்ரீமந்| ஸ்ரீரங்கஸ்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்தய
ஸ்ரீமந்| ஸ்ரீரங்கஸ்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்தய
நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார் தபரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணஸாலிநே
ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேஸிகம்

வாழியிராமானுசப் பிள்ளான் மாதகவால்,
வாழுமணி நிகமாந்த குரு - வாழியவன்
மாறன் மறையுமிரா மானுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர்.
வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியுனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல்தமிழ்மறைகள்தெளிந்துரைப்போன்வாழியே
திருமலைமால்திருமணியாய்ச் சிறக்கவந்தோன்வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
தண்டமிழ்த்தூப்புல் திருவேங்கடவன் வாழியே.
நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம் வாழ,
மாநகரின் மாறன் மறைவாழ - ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே|
இன்னமொரு நூற்றாண்டிரும்.
வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதார விந்தமலர் - வாழியவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

*****

Note:- This book has been prepared with the help of the book "Nithyanushtana Kramam" Published by Lifco.
* Final correction not yet made, spelling mistakes may be found.